சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

 மூ.மு.எண்.004119/ஆ2/2020 நாள். 08.09.2020

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி–பள்ளிக்கல்வித்துறை உதவியாளர்–நேரடி நியமனம் 2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர் திரு.ம.பிரபு என்பாருக்கு பணிவரன்முறை –ஆணை வெளியிடப்பட்டது–சார்பு

பார்வை: சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண். 22954/அ4/இ3/2020 நாள்.14.08.2020

------

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி சேலம் மாவட்டம், சங்ககிரி மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தாரமங்கலம் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரியும் திரு.ம.பிரபு என்பாருக்கு உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அன்னாரது பணிவரன்முறை ஆணை நகல் இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காகவும், பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளவும் சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்கு அனுப்பிவைக்கப் படுகிறது.

இணைப்பு. ஆணை நகல்

முதன்மைக் கல்வி அலுவலர்

சேலம்

1/3

பெறுநர்.

சம்பந்தப்பட்ட பணியாளர், (உரிய வழியாக)

நகல்.

1.வட்டாரக் கல்வி அலுவலர், தாரமங்கலம்

2.மாவட்டக் கல்வி அலுவலர், சங்ககிரி

// மின்னஞ்சலில் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,

சென்னை–600 006,

ப.மு.எண். 22954/அ4/இ3/2020, நாள்.14.08.2020.

====

**பொருள்:** தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக் கல்வித்துறை - உதவியாளர் நேரடி நியமனம் – (Group-II A Services) (Non - Interview posts) – 2014–2015 மற்றும் 2015–2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்களுக்குப்பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

**பார்வை:**

1. அரசாணை (4டி) எண்.18, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள்.28.10.2013.
2. அரசாணை (4டி) எண்.353, பள்ளிக் கல்வித்[ப.க. 4(2)] துறை, நாள். 17.12.2013.
3. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை, நாள்.15.04.2015.
4. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3, கடிதம் ந.க.எண். 7208/PSD RF-1/2016, நாள். 08.01.2017 மற்றும் 07.06.2017
5. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 4744/அ4/இ3/2017, நாள். 04.02.2017 மற்றும் 18.08.2017.
6. சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கருத்துருக்கள்.

====

2014–2015 மற்றும் 2015–2016 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் (Group-II A Services) (Non -Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை (04)ல் கண்ட செயல்முறைகள் மூலம் பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (5)ன் அடிப்படையில் ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12–ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (6)ன் வாயிலாக உரிய கருத்துருக்கள் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களின் பரிந்துரையுடன் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கீழ்க்காண் உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கெதிரில் கலம் (4)ல் குறிப்பிட்டுள்ள நாளில்பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி திரு. / திருமதி. / செல்வி. | பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறைபடுத்தும் நாள் |
|---|---|---|---|
| 1 | க.கோமதி, உதவியாளர் | அரசு மேல்நிலைப் பள்ளி, இரா.புதுப்பாளையம், நாமக்கல் மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |

| வ. எண். | பெயர் / பதவி திரு. / திருமதி. / செல்வி. | பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறைபடுத்தும் நாள் |
|---|---|---|---|
| 2 | இரா.சரவணன், உதவியாளர் | ஒன்றிய ஆசிரியர் பயிற்சி நிறுவனம், பிரம்மதேசம், விழுப்புரம்மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |
| 3 | மா.அஜிதா, உதவியாளர் | அரசு மேல்நிலைப் பள்ளி, கருங்கல், கன்னியாகுமரி மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |
| 4 | வி.பார்த்திபன், உதவியாளர் | முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டம், | 06.02.2017 முற்பகல் |
| 5 | பெ.கனிமொழிச்செல்வி, உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம் , பாலக்கோடு, தருமபுரி மாவட்டம். | 06.02.2017 முற்பகல் |
| 6 | ரா.சண்முக வடிவு, உதவியாளர் | அரசு மேல்நிலைப் பள்ளி, இரணியல், கன்னியாகுமரி மாவட்டம். | 08.02.2017 முற்பகல் |
| 7 | ம.பிரபு, உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், தாரமங்கலம். சேலம் மாவட்டம். | 09.02.2017 முற்பகல் |
| 8 | சௌ.பூர்ணிமா, உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், தாரமங்கலம். சேலம் மாவட்டம். | 23.08.2017 முற்பகல் |
| 9 | ச.மணிமாறன், உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம். | 24.08.2017 முற்பகல் |
| 10 | மு.கலாநீதி, உதவியாளர் | அரசு மேல்நிலைப் பள்ளி, கோலியனூர், விழுப்புரம் மாவட்டம். | 28.08.2017 முற்பகல் |

மேற்படி பணியாளருக்கு உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்ட ஆண்டு / தரஎண் அடிப்படையில் முன்னுரிமை அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பணிவரன்முறை குறித்து எழும் ஐயப்பாடுகளை உடனடியாக நியமன அலுவலரின் கவனத்திற்கு சம்பந்தப்பட்ட அலுவலர் கொண்டு வர வேண்டும்.

இந்தப் பணிவரன்முறையானது, பார்வை (4)ல் குறிப்பிட்டுள்ள தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்கின் தீர்ப்புக்கு உட்பட்டதாகும்.

சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் இந்தச் செயல்முறைகளை உடனடியாக மேற்படி உரிய நபருக்கு அளிக்க வேண்டும். பணியாளர் வேறு அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்டிருப்பின் அவ்வலுவலகத்திற்கு இச்செயல்முறைகளை அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்./– சு. நாகராஜமுருகன்,
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

**பெறுநர் :** சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய அலுவலர் வாயிலாக).

**நகல் :** சம்பந்தப்பட்ட அலுவலர் / தலைமையாசிரியர்.

**நகல் :** சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.